# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**<u>ஆணை நாள் – 04.04.2025</u>**

**<u>முன்னிலை</u>**

## திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## <u>வழக்கு எண். CP 4585/SCIC/2022</u>

திரு.கு.செல்வம் — மேல்முறையீட்டாளர்
கீரமங்கலம் வடக்கு அஞ்சல்
ஆலங்குடி தாலுக்கா
புதுக்கோட்டை - 614 624

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (பொது) … பொது அதிகார அமைப்பு
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
தஞ்சாவூர்,

## <u>ஆணை</u>

இவ்வழக்கின் விசாரணை ஏற்கெனவே 22/01/2025 அன்று ஆணையத்தால் நடத்தப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

> **இருப்பினும், மனுதாரரின் 06/12/2022 தேதியிட்ட தகவல் கோரும் மனு 23/12/2022 அன்று தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், பட்டுக்கோட்டை அவர்களுக்கு பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் செய்யப்பட்ட போதும், மனுதாரருக்கு தகவல்கள் 10/10/2023 தேதியிட்ட கடித த்தின் வாயிலாகத்தான் வழங்கப்பட்டுள்ளது. எனவே, 23/12/2022 தேதியன்று பட்டுக்கோட்டை வட்டத்தில் பணிபுரிந்த பொதுத் தகவல் அலுவலர் திருமதி.நா.கவிதா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், (தற்பொழுது கூடுதல் தலைமையிடத்து துணை வட்டாட்சியர், பேராவூரணி) அவர்கள் மீது உரிய காலத்தில் தகவல்களை வழங்காத தற்காக ஏன் பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான விளக்கத்தினை அவரிடமிருந்து இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் பொதுத் தகவல் அலுவலர்/மாவட் ஆட்சியரின்**

**நேர்முக உதவியாளர் (பொது), தஞ்சாவூர் மாவட்டம் மூலமாக இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு மேற்சொன்ன**



**திருமதி.நா.கவிதா அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது. மேற்சொன்ன முன்னாள் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து விளக்கத்தினைப் பெற்று 12/03/2025 அன்று இவ்வாணையத்தின் முன் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர் அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.**

2. மேற்குறிப்பிட்டவாறு திருமதி நா.கவிதா, முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் தற்போது கூடுதல் தலைமையிடத்து துணை வட்டாட்சியர், பேராவூரணி அவர்களிடமிருந்து 03/03/2025 தேதியிட்டுப் பெற்ற காரண விளக்கத்தை, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், (பொது), தஞ்சாவூர் அவர்கள் 03/03/2025 தேதியிட்டு ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

3. மேற்சொன்ன திருமதி நா.கவிதா, முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் தற்போது கூடுதல் தலைமையிடத்து துணை வட்டாட்சியர், பேராவூரணி வட்டம், அவர்களிடமிருந்து பெற்ற காரண விளக்கத்தை, ஆணையம் பரிசீலனை செய்கையில், அதனை ஆணையம் ஏற்கவில்லை. மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம்-2005-ன்படி, 30 நாட்களுக்குள் வழங்க வேண்டிய தகவலை, 10 மாதங்கள் கடந்து திருமதி.நா.கவிதா அவர்கள் வழங்கியுள்ளார். எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர் மாவட்டம் அவர்கள், மேற்சொன்ன திருமதி.நா.கவிதா, முன்னாள் பொதுத் தகவல் அலுவலர், தற்போது கூடுதல் தலைமையிடத்து துணை வட்டாட்சியர், பேராவூரணி வட்டம் அவர்கள் மீது இவ்வாணை கிடைக்கப் பெற்ற இரண்டு மாத காலத்திற்குள் துறை ரீதியிலான ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதோடு, அன்னார் மீது எடுத்த நடவடிக்கை குறித்த அறிக்கையினை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார். இத்துடன் இந்த புகார் மனு மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கப்படுகிறது.

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

## <u>வழக்கு எண். CP 4585/SCIC/2022</u>

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

1.மாவட்ட ஆட்சித் தலைவர்
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்ங
தஞ்சாவூர் மாவட்டம்.

2. பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (பொது)
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
தஞ்சாவூர்,

2. திருமதி.நா. கவிதா
முன்னாள் பொது தகவல் அலுவலர், பட்டுக்கோட்டை வட்டம்/
தற்போது தலைமையிடத்து கூடுதல் வட்டாட்சியர்
பேராவூரணி வட்டம்.

**மனுதாரர்**
திரு.கு.செல்வம்
கீரமங்கலம் வடக்கு அஞ்சல்
ஆலங்குடி தாலுக்கா, புதுக்கோட்டை - 614 624

நகல்
பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
சென்னை-600 035.

RG/PC